ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளிர் கலைக்கல்லூரி

(தன்னாட்சி)

மதுரை-2

# தமிழ்த்துறை

# எம்.ஃபில் தமிழ் இலக்கியம்

**CBCS-** பாடத்திட்டம்

2021 - 2024

(தெரிவு முறை மதிப்பீட்டுத்திட்டம்)

ஸ்ரீமீனாட்சி அரசினர் மகளிர் கலைக்கல்லூரி (தன்னாட்சி)
மதுரை – 2

## தமிழ்த்துறை

1965 ஆம் ஆண்டில் மாநகர் மதுரையில் மகளிர் கல்வி மேம்பாட்டிற்கென ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளிர் கலைக்கல்லூரி துவங்கப்பெற்றது. 1966 ஆம் ஆண்டில் கல்லூரியில் தமிழ் இலக்கியப் பாடப்பிரிவு துவங்கப் பெற்றது. 2007-2008 ஆம் ஆண்டில் தமிழ்த் துறையில் இளங்கலை தமிழ் பாடப்பிரிவு இரண்டாம் சுழற்சி துவங்கப்பெற்றது. 2013-2014 ஆம் கல்வியாண்டில் முதுகலை தமிழ் இலக்கியப் பாடப்பிரிவு துவங்கப்பெற்றது. 2017-2018 ஆம் கல்வியாண்டில் எம்.பில் - தமிழ் இலக்கியப் பாடப்பிரிவும் முனைவர் பட்ட வகுப்புகளும் (பகுதிநேரம், முழுநேரம்) துவங்கப் பெற்றன.

**சாதனைகள்**

- தமிழ்த்துறையில் பணியாற்றிய பேராசிரியர்களின் முனைவர் பட்ட வழிகாட்டுதலின் கீழ் இதுவரை பதினான்கு மாணவ, மாணவியர் முனைவர் பட்டம் பெற்றுள்ளனர். பதினைந்திற்கும் மேற்பட்ட நூல்கள் தமிழ்த்துறையில் இருந்து வெளியிடப்பட்டு உள்ளன.
- தமிழ்த்துறையின் சார்பில் 2012 ஆம் ஆண்டில் மாநிலக் கருத்தரங்கும் 2013 ஆம் ஆண்டில் தேசியக்கருத்தரங்கும் நடத்தப்பட்டது. 2015 ஆம் ஆண்டில் அரசுக்கல்லூரி வரலாற்றில் முதன் முதலாகப் பன்னாட்டுக் கருத்தரங்கை தமிழ்த்துறை நடத்தியது. 2016 ஆம் ஆண்டில் இருநாட்கள் பன்னாட்டுக் கருத்தரங்கையும் நடத்தியது. இந்தக் கருத்தரங்க ஆய்வுக் கட்டுரைகள் நூலாக வெளியிடப்பட்டு உள்ளன. 2020 ஆம் ஆண்டில் ஒரு தேசிய கருத்தரங்கமும் 2021 ஆம் ஆண்டில் ஒரு தேசிய கருத்தரங்கமும் தமிழ்த்துறையால் நடத்தப் பட்டுள்ளது. தமிழ்த்துறையில் பயின்ற மாணவியருள் பதினைந்துக்கும் மேற்பட்டோர் பல்வேறு அரசு மற்றும் தனியார் கல்லூரிகளில் துறைத்தலைவராகவும் பேராசிரியராகவும் கல்லூரிமுதல்வராகவும்பணியாற்றுகின்றனர். முன்னாள் மாணவியர் மூவர் தற்போது தமிழ்த்துறையில் பணியாற்றுகின்றனர்.
- தற்போது தமிழ்த்துறையில் பணியாற்றும் முனைவர்.சு.சந்திரா அவர்கள் 2006 ஆம் ஆண்டில் இளம் செம்மொழி அறிஞர் விருதைக் குடியரசுத் தலைவரிடம் இருந்து பெற்றார்.

- மதுரை காமராசர் பல்கலைக் கழகச் சான்றிதழ் மற்றும் பட்டயம் பெற்றுத்தரும் காந்தியச் சிந்தனை வகுப்புகளை 2005 முதல் 2017 வரை
- தமிழ்த்துறை பொறுப்பேற்று நடத்தி ஒட்டு மொத்த சுழற் கேடயத்தைப் பலமுறை வென்றுள்ளது.
- பாராளுமன்றத்தில் மாண்புமிகு அமைச்சர் தருண் விஜய் அவர்களிடம் இருந்து 2015 ஆம் ஆண்டில் திருக்குறள் முற்றோதலுக்காக தமிழ்த்துறை மாணவி செல்வி.அ. மீனாசங்கரி திருக்குறள் செல்வர் விருதும் சான்றிதழும் பெற்றுள்ளார். மேலும் பல்வேறு கலை, விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்த்துறை மாணவியர் பங்கேற்றுப் பரிசும் பெற்றுள்ளனர்.
- காந்தி- 150 ஆவது ஆண்டு விழாவையொட்டி தமிழ்த்துறை காந்தியச் சிந்தனையைக் கல்லூரியில் பரப்பிய முன்னாள் பேராசிரியர்களைக் கொண்டு விழா நடத்திக் கௌரவித்தது. மேலும் அனைத்துத் துறைப் பேராசிரியர்கள் எழுதிய காந்தி குறித்த நூல் ஒன்றினையும் ISBN எண்ணுடன் வெளியிட்டு உள்ளது.
- கல்லூரியிலேயே அதிகளவில் பன்னாட்டு, தேசிய, மாநிலக் கருத்தரங்குகளில் பங்கேற்று ஆய்வுக்கட்டுரைகள் வழங்கும் துறையாகத் தொடர்ந்து ஊக்கமுடன் தமிழ்த்துறை செயல்பட்டு வருகிறது.

**பயிற்றுவிக்கப்படும் பாடங்கள்**

- இளங்கலை தமிழ் (முதல் &இரண்டாம் சுழற்சி)
- முதுகலை தமிழ்
- ஆய்வியல் நிறைஞர் பட்டம்
- முனைவர் பட்டம் (பகுதி/முழுநேரம்)

**துறையின் இலக்கு :**

- தமிழ் மொழி மற்றும் இலக்கியத்தின் மூலம் இளம் பெண்களை ஆற்றல் சான்றவர்கள் ஆக்குதல்
- குடும்ப, சமூக, நாட்டு நலனுக்காகவும் அவற்றின் முன்னேற்றத்திற்காகவும் பாடுபடும் பொறுப்புள்ள பெண்களாக இளம் பெண்களை உருவாக்குதல்.
- தமிழ் மொழி, இலக்கியம் சார்ந்த மனித விழுமியங்களின் துணையுடன் மனித வளங்களை மேம்படுத்துதல்.

**துறையின் குறிக்கோள்**

- தமிழ் மரபின் மூலம் கலை, இலக்கியம் உன்னதம் பெறத்தூண்டுதல்.
- சமூக, சுற்றுச்சூழல் விழிப்புணர்வு பெறச் செய்தல்.
- நமது ஒருமைப்பாட்டைப் பேணும் வண்ணம் சமய நல்லிணக்கம் கொண்ட பொறுப்புள்ள பெண்களாக்குதல்.

# தமிழ் - எம்.ஃபில் பாடத்திட்டம்

## 2021 முதல் சேரும் மாணவியர்க்கு உரியது.

சேரத்தகுதி : முதுகலை தமிழ்ப் பாடப்பிரிவில் 55% சதவீத மதிப்பெண் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

அக மதிப்பீடு : 40 மதிப்பெண்கள் புற மதிப்பீடு : 60 மதிப்பெண்கள். CBCS பாடத்திட்டம்

அக மதிப்பீடு – மாதிரி தேர்வு 10 மதிப்பெண் , தேர்வுகள் 10 மதிப்பெண்கள், பயிற்சிக் கட்டுரை 5 மதிப்பெண், கருத்தரங்கு எடுத்தல் - 15 மதிப்பெண்.

புற மதிப்பீட்டில் கட்டாயம் 27 மதிப்பெண் பெற்றிருக்க வேண்டும். மொத்தம் 50 மதிப்பெண் குறைந்த பட்ச தேர்ச்சிக்கானது.

படிப்பின் நோக்கங்கள்

1. பலவகையான ஆய்வு நெறிமுறைகளைக் கற்பித்தல்
2. இந்திய இலக்கிய வரலாற்றினைக் கற்பித்தல்.
3. தமிழரது மரபான ஆய்வு நெறியினையும் மேனாட்டார் வருகையால் மாற்றம் அடைந்த ஆய்வு நெறிகளைக் கற்பித்தல்.
4. தமிழியல் பரப்பில் புதிய ஆய்வுகளைச் செய்யப்புகும் இளம் ஆய்வாளர்களுக்கு ஆராய்ச்சி நெறிமுறைகளையும் புலப்பாட்டு நெறிமுறைகளையும் புலப்படுத்துதல்.
5. முனைவர்பட்ட ஆய்விற்கு தகுதிப்படுத்துதல்.

## Programme Outcomes

PO 1 – தன்னுடைய ஆய்வுத்திட்டத்தை வடிவமைக்கும் திறம் பெற்றிருப்பர்.

PO 2 – தான் எடுத்துக் கொண்ட துறைக்கேற்ற ஆய்வு வகையை அறியும் அறிவைப் பெற்றிருப்பர்.

PO 3 – தன் ஆய்வுக்குத் தேவையான விவரங்களைத் திரட்டும் தகுதி பெற்றிருப்பர்.

PO 4 – தமிழரது மரபான ஆராய்ச்சிமுறை, மேனாட்டார் வருகையால் பெற்ற புதிய ஆய்வுப் போக்குகள் பற்றி அறிந்திருப்பர்.

PO 5 – காப்பியம், சிற்றிலக்கியம், இக்கால இலக்கியங்கள் என்பவற்றைத் தனி நூலளவிலும் ஒப்பிட்டும் ஆய்வு செய்யும் அறிவைப் பெற்றிருப்பர்.

PO 6 – மேலைநாட்டு இலக்கியக் கோட்பாடுகளைப் பற்றி அறிந்திருப்பர்.

PO 7 – நாட்டுப்புறவியல் என்ற ஆய்வுக் களத்தின் வரலாறு, ஆய்வுப் போக்குகள் பற்றி அறிந்திருப்பர்.

PO 8 – வடமொழி, தெலுங்கு, கன்னட, மலையாள இலக்கிய வகைகள், அவற்றின் போக்குகள் பற்றி அறிந்திருப்பர்.

PO 9 – பிறமொழி இலக்கியப் போக்குகளைத் தமிழ் இலக்கிய வரலாற்றுடன் ஒப்பிட அறிந்திருப்பர்.

PO 10 - இந்திய இலக்கியத்தின் பொதுமைப் பண்புகளைப் பற்றி அறிந்திருப்பர்.

## Programme Specific Outcomes

PSO 1 – ஆய்வு நெறிமுறைகளின் அடிப்படையில் தன் ஆய்வேட்டினை உருவாக்கும் திறம் பெற்றிருப்பர்.

PSO 2 – தன்னுடைய ஆய்வுக்களத்தில் ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதும் ஆற்றல் பெற்றிருப்பர்.

PSO 3 – தமிழ்மொழிக்கு உள்ளும், பிற திராவிட மொழிகளுடனும் கோட்பாடுகளைப் பொருத்தி ஆய்வு செய்யும் திறம் பெற்றிருப்பர்.

PSO 4 – தனிநூலை பிறமொழி நூல் அல்லது இலக்கிய வகையுடன் ஒப்பிட்டு ஆராயும் ஒப்பீட்டாய்வு கைவரப் பெற்றிருப்பர்.

PSO 5 - இந்திய இலக்கியத்தின் பொதுமைப் பண்புகள் தமிழ் இலக்கிய வரலாற்றில் ஏற்படுத்திய தாக்கத்தை இனம் காணும் திறன் பெற்றிருப்பர்.

PSO 6 – தமிழ் இலக்கியத்தைப் பிற துறைகளுடன் (சமுதாயவியல், உளவியல்) பொருத்தி ஆராயும் தன்மை பெற்றிருப்பர்.

PSO 7 – தமிழ் இலக்கியம் கற்றலின் வழி இந்திய ஒருமைப்பாட்டை உணர்ந்திருப்பர். பண்பாட்டுக் கூறுகளைப் புரிந்திருப்பர்.

PSO 8 - இந்திய இலக்கிய ஒப்பீட்டாய்வின் வழி இந்திய இலக்கியங்களையும் உலக இலக்கியங்களையும் ஒப்பிடும் திறன் பெற்றிருப்பர்.

# M.PHIL TAMIL SYLLABUS – CBCS

| | Sub Code | Title of The Paper | Lecture Hours | Seminar Hours | Lib. Hours | Total Hours | Int. Marks | Ext. Marks | Total | Credit |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Core Paper – 1 | MPTA1 | ஆய்வு நெறியியல் | 180 | 45 | 45 | 270 | 40 | 60 | 100 | 5 |
| Core Paper – 2 | MPTA2 | தமிழ் ஆராய்ச்சியின் வரலாறும் வளர்ச்சியும் | 180 | 45 | 45 | 270 | 40 | 60 | 100 | 5 |
| Option Paper – 1 | MPTE1 | இந்திய இலக்கிய வரலாறு | 180 | 45 | 45 | 270 | 40 | 60 | 100 | 5 |
| | | | | | | | | | | |
| | | | | | | | 120 | 180 | 300 | 15 |
| | | | | Dis. Works hours | Lib. Hours | Total Hours | | | | |
| | MPTPW | Dissertation and Viva Voice | | 90 | 90 | 180 | 25 | 75 | 100 | 25 |
| | | | | | | | | Total | 400 | 40 |

குறியீடு : **MPTA1** **Part III – Core Paper**

தரமதிப்பு : 5

வாரம் : 5 மணி நேரம்

பருவம் : 180 மணிநேரம்

**M.Phil** – முதற்பருவம் - ஆய்வு நெறியியல்

| Peadogogy | Hours | Lecture | Peer Teaching | GD / VI DEOS / TUTORIAL | ICT |
|---|---|---|---|---|---|
| | 180 | 96 | 56 | 28 | - |

நோக்கம் :

1. பலவகையான ஆய்வுமுறைகளைக் கற்பித்தல்.
2. ஆய்வுத்திட்டத்தையும் அதன்படி நிலைகளையும் அறிதல்.
3. தமிழர் ஆய்வுமுறையின் சிறப்புக்களை உணர்த்துதல்.

| S.No. | Topic | Lecture Hours | Peer Teaching | Group Discussion / Seminar |
|---|---|---|---|---|
| 1. | ஆய்வும் தன்மைகளும் | 20 Hours | 10 Hours | 6 Hours |
| 2. | அளவையியல் | 20 Hours | 16 Hours | - |
| 3. | நூலடங்கல்கள் | 16 Hours | 10 Hours | 10 Hours |
| 4. | தமிழர் ஆய்வு முறை | 20 Hours | 10 Hours | 6 Hours |
| 5. | தகவல் திரட்டலும் ஆய்தலும் | 20 Hours | 10 Hours | 6 Hours |
| | **Total Hours :** | 96 Hours | 56 Hours | 28 Hours |

முதற்பருவ முடிவில் மாணவியர் கீழ்க்காணும் திறன்களைப் பெற்றிருப்பர்.

Unit : 1 CO 1 - ஆய்வின் நோக்கம், ஆய்வின் தன்மைகள், தலைப்புத் தேர்வு, கருதுகோளின் பங்கு என்பன பற்றிய அறிவைப் பெற்றிருப்பர். – 36 hours per semester.

Unit : 2 CO 2 - மரபுவழி ஆய்விற்கும் அறிவியல் வழி ஆய்விற்குமுள்ள ஒற்றுமை, வேற்றுமைகள், அளவைக் கூறுகள் பற்றிய அறிவைப் பெற்றிருப்பர் - 36 hours per semester.

Unit : 3 CO 3 - நூலடங்கல்களின் பயன்கள், வகைகள், தமிழாராய்ச்சிக்கு உரிய நூலடங்கல்கள், பிற

துறைகளுடன் இலக்கிய ஆராய்ச்சியை (அறிவியல், சமூக, கலை) ஒப்பீட்டுச் செய்தல் பற்றிய அறிவைப் பெற்றிருப்பர். – 36 hours per semester.

**Unit : 4** CO 4 - தமிழர் ஆய்வுமுறை பற்றி இலக்கண, இலக்கிய நூல்களில் (சமூக, வரலாறு, உரை, மொழியியல்) கூறப்பட்டுள்ள கருத்துக்களை அறிந்திருப்பர். – 36 hours per semester.

**Unit : 5** CO 5 - தகவல் திரட்டப் பயன்படுத்தப்படும் உத்திகள், குறிப்பெடுத்தல், அட்டவணைப்படுத்துதல், மேற்கோள் காட்டல், அடிக்குறிப்புகள், துணைநூற்பட்டியல், பின்னிணைப்பு என்பனவற்றைக் கையாளும் திறம் பெற்றிருப்பர். – 36 hours per semester.

# ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளிர் கலைக்கல்லூரி (த)

## எம்.ஃபில் தமிழ் - பாடத்திட்டம்

## முதல்பருவம்

## தாள் 1 : ஆய்வு நெறியியல்

**Code : MPTA1** வாரம் : 12 மணிநேரம்

தரமதிப்பு : 5 பருவம் : 180- மணிநேரம்

**கூறு : 1 ஆய்வும் தன்மைகளும்**

ஆய்வு : பொருள் விளக்கம், மெய்ம்மையைக் காணும் முயற்சி, உள்ளதன் நுணுக்கம் - பிற விளக்கங்கள்

**ஆய்வின் நோக்கம்**

அறிவு விரிவு, தற்புலமை – ஆய்வின் தன்மைகள், முக்கிய இயல்புகள் - அறிவுலகிற்கு ஒரு கொடையாக அமைதல், கொடை என்பதன் விளக்கம், கொடையின் வகைகள் - அறிவுலகு : பொருள் விளக்கம்.

**ஆய்வு சொந்தப் படைப்பாதல் :**

விளக்கம், சொந்தத் திறனை வளர்க்க அடிப்படைப் பண்புகள் - அறிவியல் படைப்பு, அதன் தன்மைகள், அறிவியல் உணர்வு, விளக்கம் - அகவுணர்வு, புறவுணர்வு (Subjectivity and Objectivity) : விளக்கங்கள் - ஆய்வாளர், ஆய்வுக்கல்வி, ஆய்வாளரின் பண்பு - சிந்தனைத் தடைகள் - ஆய்வறம்.

**ஆய்வுத்திட்டமும் படிநிலைகளும்**

ஆய்வுத்திட்டமிடல் - ஆய்வுத்திட்டத்தின் இன்றியமையாமை : ஆய்வைத் திட்டமிடுவதற்கு அடிப்படையான கருத்துக்கள் - தகவல் தொகுத்தல் - ஆய்வின் பரப்பையும் எல்லையையும் வரையறுத்தல் - தலைப்புத் தேர்தல் : கவனிக்க வேண்டியவை; ஆர்வமும் தேவையும்,

கருதுகோள் (Hypotehsis) விளக்கமும் இயல்புகளும் - ஆய்வில் கருதுகோளின் **பங்கு** – வகைகள் - கருத்துக்கோட்பாடும் கருத்து உருவாக்கமும் **(concepts** and Theories )- ஆய்வில் அதன் ஆய்வில்

அதன் பங்கு – விளக்கம் - ஆய்வு – வகைப்பாடு – தொகுப்பு – நிறுவல்.

**கூறு : 2 அளவையியல்**

அளவைக்கூறுகள் (Feature of logic) : வரையறை – வகைப்படுத்தல் - காரணநியதி – அனுமானங்கள் - அளவைக்குற்றங்கள் (Fallacy) வாத வடிமைப்புக்குற்றம் - குழப்பு மொழிக்குற்றம் - பொருட்கருத்துக்குற்றம் - பொருந்தா வாதங்கள்.

## ஆய்வுமுறைகளும் வகைகளும்

ஆய்வு வழிமுறைகள் - விளக்கம் - ஆய்வுக்கும் ஆய்வு வழிமுறைகளுக்கும் உள்ள வேறுபாடு – பல்வேறான ஆய்வு முறைகளை அறிதல், அதன் தேவை – ஆய்வு முறைகளின் தொடக்கம் - வளர்ச்சி, வகைகள்.

மரபுவழி ஆய்வு முறைகள் ( Traditional Research Methods) : அவற்றின் சிறப்புகள் : மரபுவழி ஆய்விற்கும் அறிவியல்வழி ஆய்விற்கும் உள்ள ஒற்றுமையும், வேறுபாடும் - மரபுவழி ஆய்வுமுறைகளின் வகைகள்.

அளவை முறையின் தோற்றம் - வளர்ச்சி – அம்முறையைப் பின்பற்றும் துறைகள்.

அறிவியல் ஆய்வுமுறை (Scientific Research Methods) மரபுவழி ஆய்விலிருந்து மாறுபட்டது. விளக்கம் -கருத்தாய்வுப் போக்கின் முதல் மாற்றம் ஆய்வின் பயன்பாடு.

அமைப்புமுறை ஆய்வு (System Research Methods) அறிவியல் புரட்சியின் விளைவு – பல்வேறு துறைகளின் இணைப்பு, பயிற்சி, சான்றுகள் - அறிவியல் தமிழ் - அமைப்பு முறையின் கூறுபாடும் செயல்பாடும், கோட்பாடு, செயல்முறை - மதிப்பீடு, குறிக்கோள் ஆகியவற்றை மையமிட்ட ஆய்வுகள்.

**கூறு : 3 நூலடங்கல்கள் (Bibliography)**

இதன் பயன்கள் - வகைகள் - அமைக்கும் முறை – துறைதோறும் நூலடங்கல்கள், தமிழாராய்ச்சிக்குரிய நூலடங்கல்கள்.

அ. தமிழியல் ஆய்வு (மதுரை காமராசர் பல்கலைக்கழகம்)

ஆ. தொல்காப்பியம், திருக்குறள் நூலடங்கல்கள்.

இ. தமிழியல் (சென்னைப் பல்கலைக்கழகம்)

ஈ. பாரதி, பாரதிதாசன், மு.வ., அகிலன், ஜெயகாந்தன் நூலடங்கல்கள்.

உ. A Bibliography of Dravidian Linguistics, (Annamalai University, 1973)

ஊ. Classified bibiliography of linguistics, Dissertation of Indian Languages (Central Institute of Indian Languages, 1978)

எ. Dravidian Languages and Literatures (Madurai Kamaraj University )

**இலக்கிய ஆராய்ச்சி நெறி :**

பிற துறைகளும் இலக்கிய ஆராய்ச்சியும், அறிவியல், சமூகவியல், கலையியல் - முந்தைய ஆய்வினை மதிப்பிடல், பிற நூலறிவு (Peripheral Study) - இலக்கியத்தின் கூறுகள் : பொருள், வடிவம், உத்தி (Technique) - இவற்றிற்கேற்ற ஆய்வு முறைகள்.

ஆய்வு வகை : விளக்க முறை ஆய்வு (Descriptive) அளவீட்டு முறையாய்வு (Survey), பகுப்பாய்வு (Analytical) கருத்துரையாய்வு (Interpreative), ஒப்பீட்டாய்வு (Comparative), கோட்பாட்டாய்வு (Theoretical Research), பயன்பாட்டாய்வு (Applied Research) – தமிழின் நிலையும் தேவையும், கோட்பாட்டாய்வு இன்மைக்கான காரணங்கள்.

கூறு : 4 தமிழர் ஆய்வு முறை

தமிழர் ஆய்வு முறை : தொல்காப்பியம், நன்னூல் கருத்துக்கள் (உரைகளின் கருத்துக்களும்) ஆசிரியர், மாணக்கர், நூலின் அழகு, உத்தி பிற.

இலக்கிய ஆராய்ச்சியின் அணுகுமுறைகள் :

இணைப்பாய்வு (Inter –Discilplinary Approaches) வரலாற்றியல், சமூகவியல், உளவியல், அறிவியல், மொழியியல் பிற.

கூறு : 5 தகவல் திரட்டலும் ஆய்தலும்

தகவல் திரட்டப் பயன்படும் உத்திகள் : பேட்டி – களஆய்வு – வினா நிரல் - பட்டியல் - உற்றுநோக்கல் - தனிநிலை ஆய்வு (Case Study). தகவல் ஆதாரங்கள் (Primary and Secondary Sources) தகவல் பதிவு (Documentation) – நூலகப் பயன்பாடு –நூல் கற்றல் -குறிப்பெடுத்தல் முறைகள் -குறிப்புத் தொகுப்பு. முறைகள், வகைப்படுத்துதல் - பகுப்பாய்வு - அட்டவணைப்படுத்துதல்- விளக்கப்படங்கள்.

வரைகட்டப்படங்கள் (Diagrams and Graphs) விள்க்கம் கூறல் - தன்திறன் (Originality) வெளிப்பாடு.

ஆய்வேடு வரைவும் வடிவும்

ஆய்வேட்டின் வடிவமைப்பு : மேற்கோள் காட்டலும் பிற சான்றுகள் காட்டலும் - அடிக்குறிப்புக்கள் (Foot Notes) – துணைநூற்பட்டியல் - பின்னிணைப்பு – நிறுத்தற்குறியீடுகள், பிற குறியீடுகள், கருத்துக் குறியீடுகள்.

பரிந்துரை நூல்கள்

இவை பாடநூல்கள் அல்ல. இவற்றில் சொல்லப்பட்டிருக்கும் கருத்துக்களின் அடிப்படையில் வினாக்கள் அமையும்.


1. எஸ்.எஸ்.கணேசன் அறிவியல் கோட்பாடுகளும் செயல் முறைகளும், பயோனியர் புக் சர்வீஸ், 47, நல்லதம்பி தெரு, சென்னை.

2. க.நாராயணன் — ஆய்வு எது? ஏன்? எப்படி? தமிழ்ப் புத்தகாலயம், சென்னை-5.

3. ஈ.சா.விசுநாதன் — ஆய்வு நெறிமுறைகள், க்ரியா வெளியீடு, சென்னை -4.

4. முத்துச்சண்முகம் மற்றும் சு.வேங்கடராமன் — இலக்கிய ஆராய்ச்சி நெறிமுறைகள் முத்துப்பதிப்பகம், மதுரை -19.

5. தே.லூர்து, — களஆய்வு முறைகள், நாட்டுப்புறவியல் ஆய்வுத்துறை, தூய சவேரியர் கல்லூரி, பாளையங்கோட்டை.

6. தமிழண்ணல் மற்றும் எம்.எஸ்.லட்சுமணன் — ஆய்வியல் அறிமுகம், ஏரக வெளியீடு, மதுரை -20
ச.வே.சுப்பிரமணியன்(பதிப்) — ஆய்வியல் நெறிமுறைகள், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

7. தமிழண்ணல் மற்றும் இ.முத்தையா (பதிப்) — தமிழியல் ஆய்வு, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை – 21.

8. The M.L.A., — Style sheet American Studies, Resarch centre, Hyderabad.

9. கு.வெ.பாலசுப்பிரமணியன் — ஆய்வியல் நெறிகள், உமா நூல் வெளியீட்டகம், தஞ்சாவூர்.

| Cours Outcoms (Cos) | Programme Outcomes (Pos) | | | | | | | Programme Specific Outcomes (PSOs) | | | | | | Mean scores of Cos |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | PO1 | PO2 | PO3 | PO4 | PO5 | PO6 | PO7 | PSO1 | PSO2 | PSO3 | PSO4 | PSO5 | PSO6 | |
| CO 1 | 4 | 4 | - | 4 | 5 | 3 | 5 | 5 | 5 | 5 | 5 | 5 | 1 | 3.92 |
| CO 2 | 3 | 4 | 1 | 4 | 4 | 3 | 1 | 5 | 3 | 4 | - | 5 | 1 | 2.92 |
| CO 3 | 4 | 1 | 3 | 4 | 3 | 1 | 1 | 4 | 4 | 1 | 5 | - | 5 | 2.77 |
| CO 4 | 1 | 4 | 4 | 5 | 3 | 1 | 1 | 4 | 5 | 1 | 5 | 4 | 5 | 3.30 |
| CO 5 | 5 | 4 | 5 | 5 | 5 | 5 | 5 | 5 | 5 | 3 | 4 | 4 | 4 | 4.54 |
| | Mean Score of COS = 3.92, 2.92, 2.77, 3.30, 4.54. Mean Overall Score of COS = 17.45/ 5 = 3.49 = High | | | | | | | | | | | | | 3.49 |

குறியீடு : MPTA2

தரமதிப்பு : 5

வாரம் : 5 மணி நேரம்

பருவம் : 180 மணிநேரம்

M.Phil – முதற்பருவம் - தமிழ் ஆராய்ச்சியின் வரலாறும் வளர்ச்சியும்

| Peadogogy | Hours | Lecture | Peer Teaching | GD / VIDEOS / TUTORIAL | ICT |
|---|---|---|---|---|---|
| | 180 | 96 | 56 | 28 | - |

நோக்கம்

1. இளநிலை ஆய்வாளர்களுக்குத் தமிழ் ஆராய்ச்சி வரலாற்றை அறிவுறுத்துவதும் வளர்ச்சிப் படிநிலைகளை எடுத்துரைப்பதும் இதன் நோக்கங்கள்.
2. தமிழியல் ஆய்வின் பல்வேறு போக்குகளையும் அறிமுகம் செய்தல்.
3. இளம் ஆய்வாளருக்கு ஆய்வுக்களங்களை அறிமுகம் செய்தல்.

| S.No. | Topic | Lecture Hours | Peer Teaching | Group Discussion / Seminar |
|---|---|---|---|---|
| 1. | தமிழ் ஆராய்ச்சியின் வரலாறு | 20 Hours | 10 Hours | 6 Hours |
| 2. | காப்பிய ஆய்வுகள் | 20 Hours | 10 Hours | 6 Hours |
| 3. | சிற்றிலக்கியங்கள் | 20 Hours | 10 Hours | 6 Hours |
| 4. | தமிழ் இலக்கண ஆய்வின் வரலாறும் வளர்ச்சியும் | 20 Hours | 10 Hours | 6 Hours |
| 5. | நாட்டுப்புறவியல் | 20 Hours | 10 Hours | 6 Hours |
| | Total Hours : | 100 Hours | 50 Hours | 30 Hours |

முதற்பருவ முடிவில் மாணவியர் கீழ்க்காணும் திறன்களைப் பெற்றிருப்பர்.

1. CO 1 - தமிழரின் மரபான ஆராய்ச்சி முறைகள் - உரையாசிரியர்களின் ஆய்வுப்போக்குகள், மேனாட்டாரின் புதிய ஆய்வுப் போக்குகள் எனப்ன பற்றி அறிந்திருப்பர்.

2. CO 2 - பாயிரம், பதிகம், பதிப்பு என்பவற்றின் மூலமும் நூல் அரங்கேற்றம், சமய வாதங்கள் மூலமும் தமிழரின் ஆராய்ச்சி மரபுகளைப் பற்றி அறிந்திருப்பர்.

3. CO 3 - புலவர் நோக்கில், பொருள் நோக்கில், அறக்கருத்துக்கள் தொடர்பான நோக்கில் நிகழ்த்தப்பட்ட ஆய்வுகள் பற்றி அறிந்திருப்பர்.

4. CO 4 - காப்பியம், பக்தி இலக்கியம் என்ற களங்களில் முழுமை நோக்கு, தனி நூலாய்வு, கோட்பாட்டாய்வு, ஒப்பீட்டாய்வு, சமயஞ்சார்ந்து நிகழ்த்தப்பட்ட ஆய்வுகள் பற்றி அறிந்திருப்பர்.

5. CO 5 - சிற்றிலக்கியங்களிலும் இக்கால இலக்கியங்களிலும் நிகழ்த்தப்பட்ட தனி ஆய்வு, ஒப்பீட்டாய்வு, கோட்பாட்டாய்வு பற்றி அறிந்திருப்பர்.

6. CO 6 - இலக்கண நூல்களின் பதிப்பு – மரபுவழி இலக்கண ஆய்வுகள் - மொழிநூல் அறிந்தோர் நிகழ்த்திய ஆய்வுகள் - இக்கால மொழியியல் தோற்றத்திற்குப் பின் நிகழ்ந்த ஆய்வுகள் பற்றி அறிந்திருப்பர்.

7. CO 7 - தமிழில் ஒப்பிலக்கிய ஆய்வின் தோற்றம் - தமிழைக் கிரேக்கம், ஆங்கிலம், வடமொழியுடன் ஒப்பிட்டு ஆய்தல் - ஒப்பீட்டுக் கோட்பாடுகளின் அடிப்படையில் ஆய்தல் - ஒப்பிலக்கிய கோட்பாடுகளின் அடிப்படையில் நிகழ்த்தப் பட்ட ஆய்வுகளைப் பற்றி அறிந்திருப்பர்.

8. CO 8 - தமிழகத்தில் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்திற்கு முன்பிருந்த நாட்டுப்புறவியல் ஆய்வுகள், ஆங்கிலேயரால் தொடங்கி வைக்கப்பட்ட ஆய்வுத் தொடக்க முயற்சிகள், விடுதலைப் போராட்ட காலத்தில் செய்யப்பட்ட நாட்டுப்புற ஆய்வுகள் - விடுதலைக்குப் பின்னான ஆய்வு முயற்சிகள் பற்றி அறிந்திருப்பர்.

9. CO 9 - உலக மயமாக்கலின் விளைவால் நாட்டுப்புற ஆய்வில் ஏற்பட்டுள்ள விளைவுகள், வெளிநாட்டு நிதி நிறுவனங்களின் பாதிப்பு, தமிழில் பின்நவீனத்துவ ஆய்வுப் போக்குகள் பற்றி அறிந்திருப்பர்.

10. CO 10 - தமிழில் குறிப்பிடத்தக்க ஆய்வறிஞர்களைப் பற்றி அறிந்திருப்பர்.

ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளிர் கலைக்கல்லூரி (த)

எம்.ஃ.பில் தமிழ் - பாடத்திட்டம்

முதல்பருவம்

**தாள் 2 : தமிழ் ஆராய்ச்சியின் வரலாறும் வளர்ச்சியும்**

**Code : MPTA2** வாரம் : 12 மணிநேரம்

தரமதிப்பு : 5 பருவம் : 180- மணிநேரம்

கூறு : 1 தமிழ் ஆராய்ச்சியின் வரலாறு – பொதுஅறிமுகம்

சங்ககாலம், இலக்கியங்கள் - நூல் அரங்கேற்றம் - பாயிரம் - பதிகம் - பதிப்பு, சமயவாதங்கள் - உரைகள், உரையாசிரியர்களின் ஆய்வுப் போக்குகள் - மேனாட்டார் வருகை – புதிய ஆய்வுப்போக்குகள்.

**சங்க இலக்கிய ஆய்வுகள்**

சங்கம் மருவிய கால இலக்கிய ஆய்வுகள் : முழுமை நோக்கு – தனி நூலாய்வுகள் - பிற துறை ஆய்வுகள் - நலம் பாராட்டல் - ஒப்பீட்டு ஆய்வுகள், புலவர் நோக்கில் ஆய்வுகள் - பொருள்நிலை ஆய்வுகள், அகம், புறம் - அறக்கருத்துக்கள் தொடர்பான ஆய்வுகள்.

**கூறு : 2 காப்பிய ஆய்வுகள்**

காப்பிய வகைகள் - பெருங்காப்பியம் - சிறுகாப்பியம் - புராணங்கள் - தலபுராணங்கள் - முழுமை நோக்கு – தனி நூலாய்வு – கோட்பாட்டாய்வு – ஒப்பீட்டாய்வு.

**பக்தி இலக்கியம்**

சிற்றிலக்கியம் தொடர்பான ஆய்வுகள் : சைவம், வைணவம், சமயம், பௌத்தம், இசுலாம், கிறித்துவம் சார்ந்த இலக்கிய ஆய்வுகள்; தத்துவ நூல்கள் -சித்தர் பாடல்கள்- சாத்திர நூல்கள் தொடர்பான ஆய்வுகள்.

**கூறு : 3 சிற்றிலக்கியங்கள்**

சிற்றிலக்கியங்கள் (இக்காலம் வரை)-கலம்பகம்- தூது – உலா – பரணி –பிள்ளைத்தமிழ் - பள்ளு – குறவஞ்சி போல்வன குறித்த ஆய்வுகள்.

**இக்கால இலக்கிய ஆய்வுகள்**

புதினம் - சிறுகதை – கவிதை- நாடகம் - உரைநடை – பிற துறைகள் தனிஆய்வு – ஒப்பீட்டாய்வு – கோட்பாட்டாய்வு.

**கூறு : 4 தமிழ் இலக்கண ஆய்வின் வரலாறும் வளர்ச்சியும்**

தொல்காப்பியம், நன்னூல் முதலிய இலக்கண நூல்களின் பதிப்பும் உரையாசிரியர்களின் உரைப்பதிப்புகளும் - உரையாசிரியர்கள் - விளக்கமுறை ஆய்வுகள் - மரபுவழி இலக்கண ஆய்வுகள் - ரா.ராகவையங்கார், மு.ராகவையங்கார், பி.சா.சுப்பிரமணிய சாஸ்திரியார், வேங்கடராஜீலு ரெட்டியார், க.வெள்ளைவாரணனார், சி.இலக்குவனார் முதலியோரின் ஆய்வுகள் -கால்டுவெல் போன்ற வெளிநாட்டாரின் வருகைக்குப்பின் நிகழ்ந்த இலக்கண ஆய்வுகள் - மொழி நூல்கள் (Philogy) அறிந்தோர் செய்த இலக்கண ஆய்வுகள் - மு.வ., வையாபுரிப்பிள்ளை, ரா.பி.சேதுப்பிள்ளை முதலியோரின் ஆய்வுகள் - இக்கால மொழியியல் தோற்றத்திற்குப் பின் நிகழ்ந்த ஆய்வுகள் - வ.அய்.சுப்பிரமணியன் முதலியோரின் இலக்கண ஆய்வுகள் - இக்காலத்தில் நிகழ்ந்து கொண்டிருக்கும் ஆய்வுகள் - இனித் தொடரவேண்டிய இலக்கண ஆய்வுகள்.

**ஒப்பிலக்கிய ஆய்வுகள்**

அறிமுகமும் வளர்ச்சியும் - தமிழில் ஒப்பிலக்கிய ஆய்வு – வ.வே.சு.ஐயர், கைலாசபதி முதலியோர் ஆய்வுப் போக்கு – தமிழ் - கிரேக்கம், தமிழ் - ஆங்கிலம், தமிழ் - தென்னிந்திய மொழிகள் - தமிழ் - வடமொழி முதலிய நோக்குகளில் ஒப்பிலக்கிய ஆய்வு வளர்ச்சி - இலக்கியமும் பிற துறைகளும் பற்றிய ஆய்வுகளின் வளர்ச்சி – ஒப்பிலக்கியக் கோட்பாடுகளின் அடிப்படையில் ஆய்வு வளர்ச்சி, இணைநிலை, தாக்கம், இலக்கிய இயக்கம் (செவ்வியல், புனைவியல்) முதலிய அடிப்படைகளில் ஒப்பிலக்கிய ஆய்வு வளர்ச்சி.

**கூறு : 5 நாட்டுப்புறவியல் ஆய்வுகள்**

தமிழகத்தில் நாட்டுப்புறவியல் ஆய்வுகள் - ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் நாட்டுப்புறவியல் ஆய்வுத் தொடக்க முயற்சிகளும்

அவற்றின் அரசியலும் - விடுதலைப் போராட்ட காலத்தில் நாட்டுப்புறவியல் ஆய்வுப் போக்குகளும் இலட்சிய நோக்கங்களும் - விடுதலைக்குப் பின்னர் வெளிநாட்டு ஆய்வாளர்களின் ஆய்வுகளும் உலகமயமாக்கும் முயற்சிகளும் - நாட்டுப்புறவியல் ஆய்வுகளில் வெளிநாட்டு நிதி நிறுவனங்களின் பாதிப்பு – பின் நவீனத்துவ ஆய்வுப் போக்குகள்.

**ஆய்வறிஞர்கள்**

உ.வே.சாமிநாதையர், எஸ்.வையாபுரிபிள்ளை, டி.கே.சி – மு.ராகவையங்கார், ரா.ராகவையங்கார்- தெ.பொ.மீ., மு.வ.. –கைலாசபதி- பேராசிரியர் சுந்தரம்பிள்ளை – சிவராஜப்பிள்ளை – சதாசிவ பண்டாரத்தார் -மயிலை. சீனி.வேங்கடசாமி.

**பார்வை நூல்கள்**


1. ஏ.வி.சுப்பிரமணிய ஐயர் — தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சி, அமுதநிலையம், சென்னை -1959.
2. ம.மதியழகன் — தமிழியல் ஆய்வு வரலாறு, பிரித் வெளியீட்டகம், புதுவை. 1966.
3. ஆ.வேலுப்பிள்ளை — தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும், பாரிநிலையம், சென்னை. 1969.
4. பதிப்பாசிரியர் குழு — தமிழியல் ஆய்வு, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை -21.
5. ந.கடிகாசலம் (ப.ஆ) — தமிழ் ஆய்வுக்களங்கள் உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை – 1994.
6. பதிப்பாசிரியர் குழு — நாவல் இலக்கிய வளர்ச்சி, இராணி மேரிக்கல்லூரி, தமிழ்த்துறை வெளியீடு, சென்னை – 1989.
7. க.பஞ்சாங்கம் — தமிழ் இலக்கியத் திறனாய்வு வரலாறு, செல்வன் பதிப்பகம், புதுசேரி, 1990.

8. பதிப்பாசிரியர் குழு — தமிழ் இலக்கிய விமர்சகர்கள், சுவடு வெளியீடு, சென்னை -1979.

9. ந.சஞ்சீவி — சங்க இலக்கிய ஆராய்ச்சி அட்டவணை சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை -1973.

10. ஐசக் சாமுவேல் நாயகம் — பாரதி கவிதை நூல்கள் குறித்த ஆய்வுகள் - ஒரு மதிப்பீடு ஆசிரியர் வெளியீடு, சென்னை -1973.

11. க.பஞ்சாங்கம் — சிலப்பதிகாரத் திறனாய்வு ஒரு பார்வை, அன்னம், சிவகங்கை – 1993.

12. சு.சக்திவேல் — நாட்டுப்புறவியல் நூலடைவு, மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம் -1988.

13. ஆறு.இராமநாதன் (ப.ஆ) — நாட்டுப்புறவியல் ஆய்வு முறைகள், தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சை -1991.

14. Jawaharlal Handoo — South Indian Folklore- Growth and Development, Academy of General Education, Manipal, 1985.

15. கிருஷ்ணமூர்த்தி — தொல்காப்பிய ஆய்வு வரலாறு, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை -1990.

16. செ.வை.சண்முகம் — எழுத்திலக்கணக்கோட்பாடு, அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம், அண்ணாமலைநகர், 1980.

17. செ.வை.சண்முகம் — சொல்லிலக்கணக்கோட்பாடு, அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம், அண்ணாமலைநகர்-1984.

18. க.கைலாசபதி — ஒப்பியல் இலக்கியம், பாரி நிலையம், சென்னை -1969.

19. தமிழண்ணல் — ஒப்பிலக்கிய அறிமுகம், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை.

20. தமிழண்ணல் சங்க இலக்கிய ஒப்பீடு - இரண்டு பகுதிகள், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை.

21. கதிர் மகாதேவன் ஒப்பிலக்கிய நோக்கில் சங்ககாலம், மாக்மில்லன் வெளியீட்டகம், சென்னை.

22. ம.திருமலை ஒப்பிலக்கியக் கொள்கைகள். மீனாட்சி புத்தக நிலையம், மதுரை.

| Cours Outcoms (Cos) | Programme Outcomes (Pos) | | | | | | | | | | Programme Specific Outcomes (PSOs) | | | | | | Mean scores of Cos |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | PO1 | PO2 | PO3 | PO4 | PO5 | PO6 | PO7 | PO8 | PO9 | PO10 | PSO1 | PSO2 | PSO3 | PSO4 | PSO5 | PSO6 | |
| | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | - | - | - | 5 | 5 | 5 | 5 | 5 | 5 | 2.31 |
| | - | - | - | 5 | 3 | - | - | - | 2 | - | 4 | 2 | - | 1 | - | - | 1.12 |
| | 4 | 4 | 4 | 3 | 5 | 2 | - | 5 | 5 | 5 | 5 | 5 | 5 | 5 | 5 | 5 | 4.18 |
| | 4 | 4 | 4 | - | 5 | 5 | - | - | 5 | 5 | 5 | 5 | 5 | 5 | 5 | 5 | 3.87 |
| | 4 | 4 | 4 | 5 | 5 | 5 | - | - | 5 | 5 | 5 | 5 | 5 | 5 | 5 | 5 | 4.18 |
| | Mean Score of COS = 2.31, 1.12, 4.8, 3.87, 4.18<br>Mean Overall Score of COS = 3.13 High | | | | | | | | | | | | | | | | 3.13 |

குறியீடு : **MPTE1** வாரம் : 5 மணி நேரம்

தரமதிப்பு : 5 பருவம் : 180 மணிநேரம்

**M.Phil** – முதற்பருவம் - இந்திய இலக்கிய வரலாறு

| Peadogogy | Hours | Lecture | Peer Teaching | GD / VI DEOS / TUTORIAL | ICT |
|---|---|---|---|---|---|
| | 180 | 96 | 56 | 28 | |

நோக்கம்

1. இளநிலை ஆய்வாளருக்கு இந்திய இலக்கிய வரலாற்றை அறிவுறுத்துவதும், வளர்ச்சிப்படிகளை எடுத்துரைப்பதும் இதன் நோக்கங்கள்.
2. இந்திய இலக்கிய வரலாற்றின் பல்வேறு போக்குகளை அறிவது.
3. இளம் ஆய்வாளருக்கு ஆய்வுக்களங்களை அறிமுகம் செய்தல்.

| S.No. | Topic | Lecture Hours | Peer Teaching | Group Discussion / Seminar |
|---|---|---|---|---|
| 1. | வடமொழி இலக்கிய வரலாறு | 20 Hours | 10 Hours | 6 Hours |
| 2. | தெலுங்கு இலக்கிய வரலாறு | 20 Hours | 10 Hours | 6 Hours |
| 3. | கன்னட இலக்கய வரலாறு | 20 Hours | 10 Hours | 6 Hours |
| 4. | மலையாள இலக்கிய வரலாறு | 20 Hours | 10 Hours | 6 Hours |
| 5. | இந்திய இலக்கிய பொதுமைப் பண்புகள் | 20 Hours | 10 Hours | 6 Hours |
| | **Total Hours :** | 100 Hours | 50 Hours | 30 Hours |

முதற்பருவ முடிவில் மாணவியர் கீழ்க்காணும் திறன்களைப் பெற்றிருப்பர்.

1. CO 1 - வடமொழி இலக்கிய வகைகள் - போக்குகள் - இலக்கியக் கோட்பாடுகள் பற்றி அறிந்திருப்பதோடு தமிழ் இலக்கிய வரலாற்றுடன் அவற்றை ஒப்பிடவும் அறிந்திருப்பர்.
2. CO 2 - தெலுங்கு இலக்கிய வகைகள் - போக்குகள் - இலக்கியக் கோட்பாடுகள் பற்றி அறிந்திருப்பதோடு தமிழ் இலக்கிய வரலாற்றுடன் அவற்றை ஒப்பிடவும் அறிந்திருப்பர்.

3. CO 3 - கன்னட இலக்கிய வகைகள் - போக்குகள் - இலக்கியக் கோட்பாடுகள் பற்றி அறிந்திருப்பதோடு தமிழ் இலக்கிய வரலாற்றுடன் அவற்றை ஒப்பிடவும் அறிந்திருப்பர்.

4. CO 4 - மலையாள இலக்கிய வகைகள் - போக்குகள் - இலக்கியக் கோட்பாடுகள் பற்றி அறிந்திருப்பதோடு தமிழ் இலக்கிய வரலாற்றுடன் அவற்றை ஒப்பிடவும் அறிந்திருப்பர்.

5. CO 5 - இந்தியச் சிந்தனை மரபு பற்றி அறிந்திருப்பர். அது இந்திய இலக்கியங்கள் வழி வெளிப்பட்டுள்ளதை அறிந்திருப்பர் - வேதகால இலக்கியப் பாடல்களைச் சங்கப் பாடல்களைக் காதா சப்த சதியுடனும் ஒப்பிட்டு ஆராய அறிந்திருப்பர்.

6. CO 6 - அற இலக்கியங்களில் கூறப்பட்டள்ள முப்பொருள், நாற்பொருள் பற்றியும், அச்சிந்தனை வளர்ந்த விதம் குறித்தும் அறிந்திருப்பர். தமிழ்ப் பக்தி இலக்கியம், இயக்கம், வட இந்தியப் பக்தி இயக்கம், இலக்கியங்கள், கன்னட வீரசைவ இலக்கியம் என்பவற்றுக்கு இடையிலான ஒற்றுமை, வேற்றுமைகளை அறிந்திருப்பர். தமிழ்ச் சித்தர் மரபுகள் கன்னட வீர சைவ இலக்கியங்களில் வெளிப்பட்டு இருப்பதை அறிந்திருப்பர்.

7. CO 7 - இந்தியக் காப்பியங்களின் தோற்றம் - இராமாயண, பாரத, பாகவத செல்வாக்கு – சிறு காப்பியங்கள் - திராவிட இலக்கியங்களில் இவற்றின் செல்வாக்கு வெளிப்படல் - காப்பிய நிகழ்ச்சிகள் நாடகங்களாக வளர்ச்சி பெறுதலைப் பற்றி அறிந்திருப்பர்.

8. CO 8 - நாடகத் தோற்றம், வளர்ச்சி பற்றிய தமிழ்ச்சிந்தனைகள் குறித்து அறிந்திருப்பர். விடுதலைப் போராட்டக் காலத்தில் தொடங்கிய மறுமலர்ச்சி சிந்தனைகள் இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளமையை அறிந்திருப்பர்.

ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளிர் கலைக்கல்லூரி (த)

எம்.ஃ.பில் தமிழ் - பாடத்திட்டம்

முதல்பருவம்

தாள் 3 : இந்திய இலக்கிய வரலாறு

**Code : MPTE1** வாரம் : 12 மணிநேரம்

தரமதிப்பு : 5 பருவம் : 180- மணிநேரம்

**கூறு : 1 வடமொழி இலக்கிய வரலாறு**

வடமொழி இலக்கிய வகைகள் -போக்குகள் - இலக்கியக் கோட்பாடுகள் ஆகியவற்றை தமிழ் இலக்கிய வரலாற்றுடன் ஒப்பிடுதல்.

**கூறு : 2 தெலுங்கு இலக்கிய வரலாறு**

தெலுங்கு இலக்கிய வகைகள் - போக்குகள் - இவற்றைத் தமிழ் இலக்கிய வரலாற்றுடன் ஒப்பிடுதல்.

**கூறு : 3 கன்னட இலக்கிய வரலாறு**

கன்னட இலக்கிய வகைகள் - போக்குகள் - இவற்றைத் தமிழ் இலக்கிய வரலாற்றுடன் ஒப்பிடுதல்.

**கூறு : 4 மலையாள இலக்கிய வரலாறு**

மலையாள இலக்கிய வகைகள் - போக்குகள் - இற்றைத் தமிழ் இலக்கிய வரலாற்றுடன் ஒப்பிடுதல்.

**கூறு : 5 இந்திய இலக்கியப் பொதுமைப்பண்புகள்**

இந்திய சிந்தனை மரபு - இலக்கியங்கள் வழி உடனடியாக வெளிப்பட்டுள்ளதை அறிதல் - வேதகால இலக்கியம் - சங்கப்பாடல்கள். காதாசப்த சதி ஒப்பிட்டு அறிதல் - அற இலக்கியங்கள் - முப்பொருள் - நாற்பொருள் - சிந்தனை வளர்ச்சி, தமிழ்ப்பக்தி இலக்கியம் - வட-இந்தியப் பக்தி இலக்கியம் - கன்னட வீர சைவ இயக்கம் - தமிழ்ச் சித்தர் மரபு ஒப்பிடல் - இராமாயண – பாரத, பாகவத இலக்கியங்கள் - கண்ட காவியம் - காப்பியக் கொள்கை – நாடக இலக்கியக் கோட்பாடுகள் -

தமிழ்ச்சிந்தனைகள் - விடுதலைப் போராட்டக் காலமும் மறுமலர்ச்சிச் சிந்தனையும்.

**பார்வை நூல்கள்**


1. மு.வரதராசன் — தமிழ் இலக்கிய வரலாறு, சாகித்திய அகாதெமி வெளியீடு.
2. நவாலியூர் நடராசன் — வடமொழி இலக்கிய வரலாறு, கலைஞன் பதிப்பகம், சென்னை.
3. ரம். ஸ்ரீமுகளி — கன்னட இலக்கிய வரலாறு, சாகித்திய அகாதெமி வெளியீடு
4. பரமேஸ்வரன் நாயர் — மலையாள இலக்கிய வரலாறு இராம.கோபிநாத் (தொ.ஆ) சாகித்திய அகாதெமி வெளியீடு
5. தூ.சேதுபாண்டியன் மற்றும் எஸ்.ஜெயப்பிரகாஷ் — தெலுங்கு இலக்கிய வரலாறு தெலுங்குப் பல்கலைக்கழகம், ஹைதராபாத்
6. ச.வே.சுப்பிரமணியன் — திராவிட மொழி இலக்கியங்கள் - உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
7. ந.சுப்பிரமணியன் — இந்தியச் சிந்தனை மரபுகள், சவுத் ஏசியன் புக்ஸ், சென்னை
8. K.M.George (Ed) — Comparative Indian Literature, Vol I & II, Macmillan Publication Division, Madras.

| Cours Outcoms (Cos) | Programme Outcomes (Pos) | | | | | | | | | | Programme Specific Outcomes (PSOs) | | | | | | | Mean scores of Cos |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | PO1 | PO2 | PO3 | PO4 | PO5 | PO6 | PO7 | PO8 | PO9 | PO10 | PSO1 | PSO2 | PSO3 | PSO4 | PSO5 | PSO6 | PSO7 | 3.47 |
| CO 1 | 3 | 2 | 2 | 2 | 3 | 4 | 2 | 5 | 4 | 5 | - | 2 | 4 | 4 | 4 | 1 | 2 | 3.47 |
| CO 2 | - | 2 | 2 | 2 | 3 | 4 | 2 | 5 | 4 | 5 | - | 2 | 4 | 4 | 4 | 1 | 2 | 3.47 |
| CO 3 | - | 2 | 2 | 2 | 3 | 4 | 2 | 5 | 4 | 5 | - | 2 | 4 | 4 | 4 | 1 | 2 | 3.47 |
| CO 4 | - | 2 | 2 | 2 | 3 | 4 | 2 | 5 | 4 | 5 | - | 2 | 4 | 4 | 4 | 1 | 2 | 3.47 |
| CO 5 | - | 2 | 2 | 2 | 3 | 4 | 2 | 5 | 4 | 5 | - | 2 | 4 | 4 | 4 | 2 | 3 | 3.47 |
| | Mean Score of COS = 3.47<br>Mean Overall Score of COS = 17.35/ 5 = 3.47 = high | | | | | | | | | | | | | | | | | |

# ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளிர் கலைக் கல்லூரி

## (தன்னாட்சி)

மதுரை- 625 002

எம்.ஃபில் தமிழ்

2021 முதல் சேர்ந்த மாணவியர்க்கான
வினா அமைப்பு

| | | |
|---|---|---|
| பகுதி - அ | ஒரு பக்க வினாக்கள் - 5<br>அல்லது அமைப்பு முறை | 5 x 6= 30 |
| பகுதி - ஆ | கட்டுரை வினாக்கள் 3/5 | 3 x 10 = 30 |

'பகுதி – அ'விற்கு ஒவ்வொரு கூறிலிருந்து கட்டாயம் இரண்டு வினாக்களும் 'பகுதி-ஆ'விற்கு ஒவ்வொரு கூறிலிருந்து கட்டாயம் ஒரு வினாவும் இடம்பெற வேண்டும்.